**நுவரெலியா மாநகர சபை - 2013**
**நுவரெலியா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூன் 02 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஒக்தோபர் 21 ஆந் திகதி நகராதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நுவரெலியா மாநகர சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் படி மாநகர சபைக்குச் சொந்தமான புறச் செயற்பாட்டுக் கட்டிடம் தவிர ஏனைய சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களின் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,612,270 பெறுமதியான சொத்து விடயங்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 6,904,300 தொகையான வேலைக் கடன்பட்டோர் மீதி மற்றும் ரூபா 4,599,216 தொகையான வேலைக் கடன்கொடுத்தோர் மீதி என்பன நிதிக் கூற்றுக்களில் இருந்து கைவிடப்பட்டிருந்தன.

(இ) ரூபா 992,624 பெறுமதியான 09 நடமாடும் மலசல கூடங்கள், உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு வழங்கப்பட்ட தளபாடப் பொருட்கள் மற்றும் 85 உபகரணங்களின் பெறுமதி என்பன சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 1,350,816 பெறுமதியான பொதுக் களஞ்சியப் பொருள் இருப்புக்கள் நடைமுறைச் சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்படாமையினால் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் சொத்துக்களை ஏல விற்பனை செய்ததால் கிடைத்த வருமானம் ரூபா 344,055 ஆக இருந்த போதிலும் அது ரூபா 260,453 ஆக நிகழ்ச்சித்திட்ட வருமானத்தில் செலவு வைக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் மிகை ரூபா 83,596 தொகை குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஊ) காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளில் காண்பிக்கப்பட்ட ஊழியர் கடன் பெறுவனவு மற்றும் ஊழியர் கடன் கொடுப்பனவு முறையே ரூபா 12,069,958

தொகை மற்றும் 16,014,566 ஆக இருந்த போதிலும் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் படி அப்பெறுமதி முறையே ரூபா 11,309,707 தொகை மற்றும் ரூபா 12,254,316 ஆனமையால் கடன் பெறுவனவுகளில் ரூபா 760,251 தொகையும் கடன் கொடுப்பனவுகளில் ரூபா 3,760,250 தொகையுமான வேறுபாடுகள் காணப்பட்டன.

(எ) மீளாய்வாண்டின் போது இலங்கை வங்கியில் நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 3,000,000 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் கைவிடப்பட்டிருந்தது.

(ஏ) செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலில் பெறுவனவுகளின் கீழ் காண்பிக்கப்பட்ட வருமானங்களில் ரூபா 12,334,154 தொகையான முரண்கள் அவதானிக்கப்பட்டது.

(ஐ) மீளாய்வாண்டின் போது சபையின் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஆசிய மன்றத்தின் மூலம் கிடைத்த ரூபா 995,000 இல் ரூபா 467,000 தொகை மாத்திரம் ஆண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக ஆண்டின் மிகை ரூபா 528,000 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) முன்னைய ஆண்டின் கடன்பட்டோர் நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யும் போது மேலதிகமாக ஒதுக்கப்பட்ட ரூபா 169,758 தொகையான கடன்பட்டோர் பெறுமதியொன்று மீதியில் உள்ளடக்கப்பட்டமையினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நடைமுறைச் சொத்துக்கள் அந்த அளவினால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 35,312 தொகை மற்றும் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 2,174 தொகையான மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைத்தல் கட்டண வருமானம் பொது வைப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 10,848,350 தொகையான சபையின் சொத்துக்களை வாடகைக்கு வழங்கும் கேள்வில் பெறுமதி ஆண்டிற்குரிய வருமானம் ரூபா 8,912,322 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக ஆண்டின் வருமானம் ரூபா 1,936,028 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

02 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 19,610,538 ஆக இருந்ததுடன் உபயோகப் பதிவேடுகளின் படி அந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 23,095,737 ஆனமையால் ரூபா 3,485,199 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 31,968,977 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

i. 2013 சனவரி முதல் மார்ச் வரை ரூபா 581,127 பெறுமதியான 17 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

ii. மாநகர சபையின் உத்தியோகத்தர்களுக்காகவும் ஊழியர்களுக்காகவும் ரூபா 383,121 தொகை செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 193 பாதணிகளில் 100

பாதணிகள் சுகாதாரப் பிரிவின் சாரதிகள், கங்காணி மற்றும் தொழிலாளர்களுக்காக விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய ஊழியர்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கான கையொப்ப பதிவேடு காணப்படவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1988 இன் மாநகர சபைக் கட்டளைச் சட்டம் | |
| i. 40(1) ஊ உபபிரிவு | மாநகர சபைக்குச் சொந்தமான காணி உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சரினதும், சனாதிபதியினதும் அங்கீகாரம் மற்றும் வாடகை உடன்படிக்கை இன்றி அனுமதியற்ற வகையில் உரித்து கோரப்பட்டிருந்ததுடன் இந்தக் காணி தொடர்பாக பெறப்பட்ட மதிப்பீட்டு அறிக்கை 05 வருடங்களுக்கு ஒரு தடவை நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) காணிக் கட்டளைச் சட்டம் மற்றும் சனாதிபதி அவர்களின் 1995 யூலை 14 ஆந் திகதிய (SEI/A/4/34) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தி | மாநகர சபை எல்லையில் வணிக ரீதியான அடிப்படையில் வழங்கப்பட்ட காணிகளின் வாடகைப் பணம் 05 வருடங்களுக்கு ஒரு தடவை 50 சதவீதம் அதிகரித்து திருத்தம் செய்யப்பட்டமையினால் 03 காணிகளை வாடகைக்கு வழங்கியதற்காக ரூபா 4,217,687 அளவிலான வாடகை வருமானமொன்றை மாநகரசபை நிதியம் இழந்திருந்தது. |
| (இ) மோட்டார் போக்குவரத்து அதிகாரச்சட்டம் (203 ஆம் அதிகாரம்) (19)(அ)(1) ஆம் பிரிவு | மோட்டார் போக்குவரத்து ஆணையாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது ரூபா 125,000 தொகை செலவில் சபைக்குச் சொந்தமான ஜீப் வண்டியின் நிறம் மாற்றப்பட்டிருந்தது. |
| (ஈ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| i. 571 | வைப்புச் செய்யப்பட்டு 02 வருடங்களை விஞ்சிய ரூபா 4,817,098 பெறுமதியான வைப்புக்களை ஓய்வுபெறச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| ii. 751 | சமூக அபிவிருத்திப் பிரிவிற்குக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 310,060 தொகையான அலுவலக உபகரணங்கள் பொருட்பதிவேட்டிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. |
| iii. 1645(அ) | 06 வாகன விபத்துக்கள் தொடர்பாக சம்பவத்திரட்டுப் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (உ) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4 ஆம் பிரிவு | ரூபா 1,612,270 தொகை செலவிடப்பட்ட சபையின் புதிய கட்டிடத்தின் நினைவுப் பலகை, பெயர்ப் பலகை மற்றும் சுவர் அலங்கார வரைபடங்களுக்காக சபை 03 விலைகளை மாத்திரம் பெற்றிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. |
| (ஊ) | தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4:5, 4:6, 12 மற்றும் 10 ஆம் பிரிவுகள் | நகரசபையில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 40 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த விழா, விஷேட முற்பணம் மற்றும் இடர்கடன் பணத்திலிருந்து ரூபா 823,503 தொகையான கடன் தொகை பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அறவிட முடியாதிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 104,745,298 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 121,868,017 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டின் மிகையை முன்னைய ஆண்டின் மிகையுடன் ஒப்பீடு செய்தபோது ரூபா 17,122,720 குறைவாக இருந்தது.

மீளாய்வாண்டில் சம்பள மீளளிப்பாக ரூபா 100,194,003 தொகை கிடைத்திருந்த போதிலும் சம்பளமும் படியுமாக ரூபா 109,101,952 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி சபையின் வருமானத்தில் ரூபா 8,907,949 தொகை சபை ஊழியர்களுக்குச் சம்பளமாகச் செலுத்துவதற்கு செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அந்தத் தொகை சம்பள மீளளிப்பிற்கான சபையின் மீண்டெழும் வருமானத்தில் 4.25 சதவீத பெறுமதியைக் கொண்டிருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

2013.12.31 இல் நிலுவை

| வருமான விடயம் | 2013.01.01 இல் நிலுவை | 2013.01.01 இல் நிலுவையில் அறவீடு | 2013 ஆம் ஆண்டின் பற்றுச்சீட்டிடல் | ஆண்டின் பற்றுச்சீட்டிடலில் அறவிடப்பட்டவை | 2013.01.01 இல் காணப்பட்ட நிலுவை | 2013 ஆம் ஆண்டின் பற்றுச்சீட்டில் | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி | 59,941,665 | 14,857,205 | 38,687,596 | 17,396,153 | 45,084,460 | 21,291,443 | 66,375,903 |
| வாடகை | 27,523,191 | 4,116,529 | 22,817,869 | 13,688,685 | 23,406,662 | 9,129,184 | 32,535,846 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,187,500 | 693,500 | 8,120,521 | 7,694,021 | 494,000 | 426,500 | 920,500 |
| நீர்க் கட்டணம் | 17,697,274 | 10,714,351 | 39,173,714 | 27,265,451 | 6,982,923 | 11,908,263 | 18,891,186 |
| மொத்தம் | 106,349,630 | 30,381,585 | 108,799,700 | 66,044,310 | 75,968,045 | 42,755,390 | 118,723,435 |

### 2.3.2 ஆதனவரி

(அ) 2012 ஆம் ஆண்டின் பாதீட்டின்படி ஆதன வரியின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 42,000,000 ஆகும். 2013 ஆம் ஆண்டில் ரூபா 36,000,000 தொகை குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டமைக்கான காரணம் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஸ்ரீ பியதிஸ்புர வீதியில் அமைந்துள்ள ஆதனமொன்றில் 2005 ஆகஸ்ட் 09 வரை காணப்பட்ட ரூபா 24,299 ஆதனவரி நிலுவையின் காரணமாக தடைசெய்யப்பட்ட குளிரூட்டி, தொலைக்காட்சி மற்றும் உபகரணத் தொகுதிகள் ஆதன உரிமையாளரினால் எக்கொடுப்பனவும் செலுத்தாதிருக்கும் போது உரிமையாளருக்கு மீளக் கையளிக்கப்பட்டிருந்தது. 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 72,606 தொகையான ஆதனவரித் தொகையும் அந்த ஆதன உரிமையாளரிடமிருந்து அறவிடவேண்டியிருந்தது.

### 2.3.3 வாடகை

சபையில் நீண்ட காலமாகவும், வருடாந்த வாடகை அடிப்படையிலும் வழங்கப்பட்ட காணிகளின் கோவைகளை பேணிச் செல்லும் முறையற்ற தன்மை, நிர்வாகத்தின் செயற்திறனற்ற தன்மை, மேற்பார்வையின்மை மற்றும் வாடகையிறுப்பாளர்களுக்கு அறிவித்து வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 7,567,838 வாடகை வருமானம் நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

சபையின் உபவிதி வர்த்தமானி அறிவித்தலின்படி, சுற்றுலா அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள நிறுவனங்களிலிருந்து மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணைய தளத்தில் நுவரெலியா நகர எல்லைக்குள்

பதிவு செய்யப்பட்ட 09 நிறுவனங்களிலிருந்து உப விதியின்படி கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 நீர்க்கட்டணம்

மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட நிலுவையான நீர்க்கட்டண மீதியில் நீர் இணைப்பு துண்டிக்கப்பட்டு ஒரு வருடத்தை விஞ்சி அறவிடப்படாது காணப்படுகின்ற 104 நீர்ச் சேவைகளுக்குரிய ரூபா 4,418,317 தொகை காணப்பட்டதுடன் இந்தப் பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.6 விளம்பர அறிவித்தல் பதாதைக் கட்டணம்

சபையின் வருமானம் பரிசோதகரினால் நகர சபை அதிகாரப்பிரதேசத்தில் தாபிக்கப்பட்ட விளம்பர அறிவித்தல் பதாதை பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட 34 அறிவித்தல் பதாதைகளிலிருந்து மாநகர சபை உப விதிகளின்படி அறவிடவேண்டிய ரூபா 1,901,100 இனை அறவிடுவதற்கு 2013 யூலை 08 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.7 கிரகரி குளத்தில் படகுச் சேவை

(அ) நுவரெலியா கிரகரி குளத்தில் படகுச் சேவையை நடாத்திச் செல்வதற்காக 2013 ஒக்தோபர் 10 ஆந் திகதி வரையிலும் ரூபா 901,867 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. கிரகரி குளத்தில் படகின் 2013 ஒக்தோபர் 14 ஆந் திகதி பௌதீகரீதியில் பரிசோதனை செய்த போது சபையிலிருந்து வருமானம் அறவிடப்படுகின்ற 67 படகுகளின் எண்ணிக்கையை விட அதிகமாக 14 படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அந்த படகுகளிலிருந்து வருடாந்தம் ரூபா 421,575 தொகையான வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக அனுமதியற்ற படகுச் சேவையொன்று நடாத்தப்படுகின்ற படகு உரிமையாளரிடமிருந்து 2013 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 114,975 தொகையான வருமானமொன்று அறவிடவேண்டியிருந்தது. எந்த படகு உரிமையாளருடனும் சபை உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை.

(ஆ) கிரகரி குளத்தின் சார்ஜ் வீட்டு படகுச்சேவை நடாத்திச் செல்லப்படுகின்ற தனியார் கம்பனியுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின்படி அரசாங்க மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது, 2012 ஆம் ஆண்டின் போது நாளொன்றுக்கு ரூபா 400 வீதம் வருடத்திற்கு ரூபா 140,000 கட்டணத்தில் 5 சதவீதம் அதிகரித்து 2013 ஆம் ஆண்டிற்கு வாடகை அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.8 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய பணம் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப் பணம் | 41,489 |
| முத்திரைக் கட்டணம | 10,637,667 |
| மொத்தம் | 10,679,156 |

**2.3.9 பம்பரகெலே கல்அகழ்வை குத்தகைக்கு வழங்குதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பம்பரகலே இல் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான கல்அகழ்வு வாடகையாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை வாடகையான ரூபா 630,000 வாடகைப் பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இயற்கை வளங்களை அகழ்ந்தெடுக்கும் இறைவரியானது உரிய வளங்களை பயன்பாட்டிற்கு எடுக்கும் அளவின் அடிப்படையில் பெறப்படுவதாக இருந்த போதிலும் கல்அகழ்வு குத்தகைக்கு வழங்கும் உடன்படிக்கையின்படி வருடாந்த வாடகைத் தொகையில் வாடகைக்கு வழங்குவதன் மூலம் வாடகைக் கொள்வனவாளருக்கு வரையறையற்ற அளவில் அகழ்ந்தெடுக்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் அது அரசாங்கத்தின் வளங்களை முறையற்ற பாவனைக்கு இடமளிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்படுகின்றது.

(இ) வாடகையிறுப்பாளருடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் நிபந்தனையின்படி குத்தகை வழங்கிய தரப்பினரின் எழுத்துமூல முன் அனுமதியின்றி அனுமதியற்ற நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், உடன்படிக்கையின்படி சபைக்கு இந்த கல்அகழ்வைக் கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பம்பரகெலேயில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான கல்அகழ்விலிருந்து நகரசபை கல் வழங்கும் போது சராசரியான விற்பனை விலையினை விட 20 சதவீதத்தினால் குறைத்து வழங்கப்பட வேண்டும். நகர சபைக்கு 2011, 2012 ஆம் ஆண்டுகளில் ரூபா 1,648,950 பெறுமதியான கல், மணல் மற்றும் கல்துாள் வெளி நிறுவனங்களிலிருந்து பெறப்பட்டமையால் நகர சபை நிதியத்திற்கு இந்த இரண்டு ஆண்டுகளில் மாத்திரம் ரூபா 329,790 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றலை மதிப்பிடல்

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்கியிருந்தமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பௌதீக மற்றும் நிதி செயலாற்றல் சாதனைகளை காண்பிக்கின்ற முன்னேற்ற அறிக்கை மற்றும் கட்டுப்பாட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

நகரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி சில துறைகளுக்காக அமைய, நாட்கூலி மற்றும் நாளாந்த சம்பள அடிப்படையில் ஊழியர்கள் சேர்க்கப்பட்டமையினால் 178 ஊழியர்கள் மிகையாக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அந்த ஊழியர்களுக்காக 2014 சனவரி, பெப்ரவரி என்ற இரண்டு மாதங்களின் போது சம்பளம் செலுத்துவதற்கு ரூபா 6,715,599 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) சபைக்குச் சொந்தமாக 9 வாகனங்களுக்குரிய வருடாந்த வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு பல வருட காலமாக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அதில் 3 வாகனங்கள் நகர சபைக்கு கிடைத்த திகதியிலிருந்து வருடாந்த வருமான அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாநகர சபையினால் 2013 ஆம் ஆண்டில் ரூபா 51,922,189 தொகை செலவில் நகர சபை புறச்செயற்பாட்டுக் கட்டிடத்தில் 16 கடைகளின் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு 2013 செப்தெம்பர் 16 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2014 யூன் 01 ஆந் திகதி வரையிலும் மூடப்பட்டிருந்தது.

(இ) சபையின் நானாவித செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்காகவும் முன்னேற்றுவதற்காகவும் ஆசிய மன்றத்தின் மூலம் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 995,000 தொகையில் ரூபா 373,283 தொகையை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2013 ஆம் ஆண்டிற்குரிய வியாபார அனுமதிப்பத்திரம் பெற்று, சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறாத விடுதிகள், ஹோட்டல், தங்குமிடங்கள், கராஜ்கள் மற்றும் அரைக்கும் ஆலைகள் போன்ற சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய 11 வகையான வியாபாரங்களுக்குரிய கைத்தொழில் / செயற்பாடுகளுக்காக அவற்றை நடாத்திச் செல்லும் நபர்களுக்கு எதிராக 2000 இன் 53 ஆம் இலக்க திருத்தப்பட்ட தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23 ''அ'' பிரிவின் பிராகரம் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 வாகனக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நகர ஆணையாளரின் உத்தியோகபூர்வ வாகனமாக ஒதுக்கப்பட்ட வாகனத்திற்காக கடமை நடவடிக்கைகளுக்காக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட ஒரு மாதத்திற்குரிய 140 லீற்றர் எரிபொருளை விஞ்சி 2013 ஏப்ரல் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை 2262 லீற்றர் எரிபொருளை வழங்கி அதற்காக ரூபா 274,335 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் செப்தெம்பர் முதல் திசெம்பர் வரையான கலத்தில் நகர சபை எல்லைக்கு வெளியே அமைந்துள்ள கொழும்பு, கண்டி, நீர்கொழும்பு, வெல்லவாய போன்ற நகரங்களுக்கு 16 சந்தர்ப்பங்களில் நகர சபை உறுப்பினர்களால் சபையின் கடமையல்லாத செயற்பாடுகளுக்கு வாகனம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(இ) மாநகர சபைக்கு வெளிநாட்டு உதவியின் கீழ் தீயணைப்பு செயற்பாட்டிற்காக வழங்கப்பட்ட 04 வாகனங்கள் பயிற்சிக்காக சபையின் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டதுடன் சில சந்தர்ப்பங்களில் சபை அதிகார பிரதேசத்திற்கு வெளியே ஒரு நாளைக்கு மேற்பட்ட காலம் வெளி கடமைகளுக்காகவும் இந்த தீயணைப்புப் பிரிவின் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

### 3.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

(அ) மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதி செயல்திட்டத்தை துரிதமாக பூர்த்தி செய்வதற்கு அவசரத் தேவையாகக் கருதி ரூபா 2,565,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 500 கொங்கிரீட் கூறுகள் 2013 யூன் 6 ஆந் திகதி பௌதீக பரிசோதனை சந்தர்ப்பம் வரையிலும் 119 இருப்புகள் களஞ்சியத்திலும் 5 அலகுகள் பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளுக்கு அருகிலும் காணப்பட்டன.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின்படி ஏலத்தில் விற்பனை செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்ட 02 மோட்டார் சைக்கிள் மற்றும் 07 வகைக்குரிய 29 உபகரணங்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் ஏலத்தில் விற்பனை செய்யப்படாமலும் அல்லது ஏதாவது வேறுபயன்பாடுகளுக்கு எடுக்கப்படாமலும் விளைவற்றுக் காணப்பட்டது.

## 3.6 இனங்காணப்பட்ட நட்டம்

(அ) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்துகின்ற இரண்டு உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 128,104 தொகையான இடர் கடன் அவர்கள் ஓய்வுபெற்றுச் செல்லும் போது அரசாங்கத்திற்கு அறவிடவேண்டிய சகல கடன் பணமும் அறவிடப்பட்டு விடுவிக்கப்படாமையினால் மாநகர சபை நிதியத்திற்கு அந்த அளவினால் நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) வாகனங்களுக்கான வருமான அனுமதிப்பத்திரம் வருடாந்தம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் சபைக்குச் சொந்தமான 3 வாகனங்களுக்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 15,619 தண்டப் பணம் செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டில் நிதியேற்பாட்டு எல்லையை விஞ்சி 02 செலவின தலைப்புக்களில் ரூபா 8,401,807 தொகையான செலவிடப்பட்டிருந்தும் அதற்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 06 வருமானத் தலைப்புக்களுக்குரிய 24 உப விடயங்களுக்காக பாதிடப்பட்ட ரூபா 8,568,250 தொகையான வருமானத்தின் அறவீடு 0 சதவீதமாக இருந்தது.

(இ) பாதீடு செய்யப்படாத 03 வருமானத் தலைப்புகளுக்குரிய 03 உப வருமான விடயங்களில் ரூபா 566,466 தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பாதிடப்பட்ட 03 வருமானத் தலைப்புக்களுக்குரிய 4 உப வருமான விடயங்களில் 71 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான வீச்சில் இலக்கிடப்பட்ட வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட பாதீட்டின் படி மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடுசெய்த போது 02 வருமான விடயங்களில் 14 சதவீதம் முதல் 86 சதவீதம் வரையும், 08 செலவின விடயங்களில் 14 சதவீதம் முதல் 93 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

### 4.2 தீர்க்கப்படாத மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 29 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கொள்வனவுத் திட்டம்

சபையின் கொள்வனவுகள் மற்றும் நிர்மாணங்கள் தொடர்பாக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தை நடாத்துதல்**

---

நிறுவனத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 உள்ளகக் கணக்காய்வு**

---

நிறுவனத்தில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கட்டுப்பாடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) இருப்புக் கட்டுப்பாடு